# கிளி/மாயவனூர் வித்தியாலயம்

## பாராட்டு விழா-2021

### முதன் முதலாக




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி/ மாயவனூர் வித்தியாலயம்

## *சாதனையாளர் கௌரவிப்பு விழா - 2021*

(2020 தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்கள்,

பல்கலைக்கழகத்திற்கு தெரிவான பழைய மாணவிகள்)

**காலம் :- 23.02.2021 செவ்வாய்க்கிழமை**
**நேரம் :- மு.ப 10.30 மணி**

### தலைவர்

**திருமதி. லக்ஷ்சாந்தி கோபாலராசா** அவர்கள்

(பாடசாலை முதல்வர்)

### முதன்மை விருந்தினர்

**திரு.சுப்பிரமணியம் தர்மரட்ணம்** அவர்கள்

(கோட்டக்கல்வி பணிப்பாளர் கரைச்சி)

### சிறப்பு விருந்தினர்

**திரு. பாலையா ஸ்ரீஸ்குமார்** அவர்கள்

(ஆரம்பக்கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர், கிளி/ கல்வி வலயம்)

### கௌரவ விருந்தினர்

**திரு. பரராஜசிங்கம் சசிரதன்** அவர்கள்

(செயற்பட்டு மகிழ்வோம் வலய இணைப்பாளர்)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

**- பாடசாலைச் சமூகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகுடவாசகம்

"அறிவே எமது உயிர்"

## தூரநோக்கு

நிதமும் மாறிக்கொண்டிருக்கும் உலகிற்கேற்ப வளமான சமூகத்தை உருவாக்குவோம்.

## பணிக்கூற்று

"உரிய தேர்ச்சி மட்டத்தை அடைவதற்காக கிடைக்கக்கூடிய வளங்களை திசைக்கோட்படுத்தல்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை விபரம்

1. பாடசாலையின் பெயர் :- கிளி/மாயவனூர் வித்தியாலயம்.
2. பாடசாலை முகவரி :- மாயவனூர், வட்டக்கச்சி.
3. மாகாணம் :- வடமாகாணம்
4. மாவட்டம் :- கிளிநொச்சி
5. கல்வி வலயம் :- கிளிநொச்சி
6. கல்விக்கோட்டம் :- கரைச்சி
7. பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு :- 01.01.2003
8. பாடசாலையின் வகை :- வகை III
9. வகுப்புக்கள் :- தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை
10. கிராம சேவையாளர் பிரிவு :- KN/40 மாயவனூர்
11. பிரதேச செயலர் பிரிவு :- கரைச்சி
12. பாடசாலையின் முதல் முதல்வர் :- திருமதி.ல.கோபாலராசா
13. பாடசாலை அடையாள இலக்கம் :- 1101036
14. பாடசாலை தொகை மதிப்பீட்டு இலக்கம் :- 10098
15. தொலைபேசி இலக்கம் :- 021 320 8363
16. பாடசாலையின் காணியின் அளவு :- 5 ஏக்கர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் அறிக்கை 2021

கிளி/ மாயவனூர் வித்தியாலயத்தில் 2020 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான பாராட்டுவிழாவும், எமது பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட பழைய மாணவர்களுக்கான பாராட்டு விழாவும் நடைபெறுவதையிட்டு பாடசாலைச் சமுகம் பெருமிதம் கொள்கின்றது.

எமது அன்பான அழைப்பினை ஏற்று இந் நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக வருகை தந்திருக்கும் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு.சுப்பிரமணியம் தர்மரட்ணம் அவர்களே மற்றும் சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கும் ஆரம்பக் கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திரு. பாலையா ஸ்ரீஸ்குமார் அவர்களே மற்றும் கௌரவ விருந்தினராக வருகை தந்திருக்கும் செயற்பட்டு மகிழ்வோம் வலய இணைப்பாளர் திரு.பரராசசிங்கம் சசிரதன் அவர்களே மற்றும் எமது பாடசாலையின் வலயப் பிரதிநிதி திரு.பூபாலசிங்கம் திருக்குமார் அவர்களே மற்றும் கல்விப் புலம் சார்ந்த பெரியோர்களே, ஏனைய பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளே, அயற் பாடசாலை அதிபர்களே, பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ள பழைய மாணவிகளே, அயற் பாடசாலை ஆசிரியர்களே, எமது பாடசாலை ஆசிரியர்களே, பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களே, என் அருமை மாணவச் செல்வங்களே, அன்புசார் பெற்றோர்களே, பழைய மாணவர்களே, நலன் விரும்பிகளே அனைவருக்கும் இனிய காலை வணக்கம்.

எமது பாடசாலை 2003 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அக்காலப்பகுதியில் எவ்வித பௌதீக வளங்களும் அதிபர் அலுவலகமும் இல்லாமல் ஒரு தற்காலிக கொட்டகையில் நிலத்தில் இருந்து மாணவர்கள் தமது கற்றலை மேற்கொண்டனர். அதன் பின் படிப்படியாக வளர்ச்சி பெற்ற எமது பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17 வருடங்கள் உருண்டோடி 18ஆவது அகவையில் காலடி எடுத்து வைத்திருக்கின்றது. குறுகிய காலத்தில் பல சாதனைகளை புரிந்தது என்றால் மிகையாகாது.

2014 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் செல்வன் **குணலிங்கம் அருள்வேந்தன் வெட்டுப் புள்ளிக்கு மேல் 162 புள்ளிகள்** பெற்று முதன் முறையாக வரலாற்று சாதனை படைத்தமை பாடசாலை வரலாற்றுப் பதிவாகும். 2015 ஆம் ஆண்டு கோவிந்தராஜன் நிஷ்விகா வெட்டு புள்ளிக்கு மேல் 164 புள்ளிகளைப் பெற்றார். 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 12 மாணவர்கள் தோற்றி **செல்வி.பரமேஸ்வரன் கம்சிகா வெட்டுப் புள்ளிக்குமேல் 171 புள்ளிகளைப்** பெற்று பாடசாலைக்கு பெருமையைச் சேர்த்துள்ளார். மேலும் 8 மாணவர்கள் 70 புள்ளிக்கு மேல் பெற்று சித்தி வீதம் 75 வீதமாக உயர்தப்பட்டுள்ளது. சென்ற வருடம் கொரோனா எனும் நோயின் பீதியுடன் போராடி பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் திருமதி.உஷாயினி மாதவரூபன் ஆசிரியர் அவர்கள் இம் மாணவர்களுக்கு கற்றல், கற்பித்தலை மேற்கொண்டதன் பயனாக சித்தி வீதம் 75 வீதமாக உயர்ந்துள்ளது. இம் மாணவர்களுக்கு முதன்மை நிலை ஒன்றில் திருமதி.குறிஞ்சி கங்காதரன் அவர்கள் ஆரம்பக் கல்விக்கான அடித்தளத்தினை மிகவும் உறுதியாக இட்டுள்ளார் என்பதில் ஐயமில்லை. அத்துடன் மாதிரி வினாத்தாள்கள், கற்றல் கையேடுகள் போன்றவற்றை வழங்கி ஆதரவளித்த வலயக்கல்விப்பணிப்பாளர், கோட்டக்கல்விப்பணிப்பாளர், ஆரம்பக் கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர், ஆரம்பக் கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோரும் ஆதரவு நல்கினார்கள்.

இவ் வருடம் தரம் 5 மாணவர்களுக்கு மேலதிக வகுப்புக்கள், மாலை நேர வகுப்பபுக்கள் மற்றும் இரவு நேர வகுப்புக்கள் நடைபெற்றுவருகின்றன. இவ் வருடம் கடந்த வருடத்தினை விட சித்தி வீதத்தினை உயர்துவதற்கான துரிதவேலைத்திட்டங்கள் நடைபெற்றுவருகின்றன. இரவுநேர வகுப்பில் கற்பிக்கும் ம.வினோஜா ஆசிரியருக்கான பத்தாயிரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூபா வேதனத்தினை கொழும்பு மத்தியவங்கியினுடைய பிரதிப்பணிப்பாளர் திரு.ச.குறிஞ்சிதரன் அவர்களின் ஏற்பாட்டில் கல்வி மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கான அய்ஷா அறக்கட்டளை அமைப்பின் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது. சுவிஸ்சில் வசிக்கம் திருமதி.றதி லிங்கநாதன் அவர்கள் பயிற்சி வினாத்தாள்களினை பெறுவதற்காக ஏற்பாட்டினைச் செய்துள்ளார்.

எமது பாடசாலையில் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் தமது ஆரம்பக் கல்வியை கற்ற மாணவிகள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியமை பாராட்டுக்குரிய விடயமாகும். அந்த வகையில் 2018 கல்வியாண்டில் செல்வி.செல்வம் கபிர்சனா (நாடகமும் அரங்கியலும்), செல்வி.கலைச்செல்வன் டயாழினி (இந்துநாகரிகம்), 2019 கல்வியாண்டில் செல்வி.விமலேஸ்வரன் டிலக்சனா (வணிகப் பிரிவு, 3A, மாவட்டநிலை 3- முகாமைத்துவம்), செல்வி.கருணாகரன் அனுஜா (பிரயோக விஞ்ஞானம்), செல்வி.ஜெயக்குமார் டிலோஜினி (கர்நாடக சங்கீதம்), செல்வி.பாலகிருஷ்ணன் நவப்பிரியா (நாடகமும் அரங்கியலும்), செல்வி.ஜோச்ரவீந்திரன் கோபினா (நாடகமும் அரங்கியலும்) ஆகிய மாணவர்கள் எமது பாடசாலைக்கு பெருமையை தேடித்தந்துள்ளனர்.

2019 கல்வியாண்டில் மாயவனூர் கிராமத்தில் 5 மாணவிகள் தெரிவு செய்யப்பட்டமை பாடசாலைக்கும், இக்கிராமத்திற்கும் பெருமையை சேர்க்கின்றது. ஏற்கனவே செல்வி.பரந்தாமன் துஷாளினி பல்கலைக்கழகத்திலும், செல்வி.அலோசியஸ் கௌசிகா கல்வியற் கல்லூரியை நிறைவு செய்து தமிழ்பாட ஆசிரியராக முல்லைத்தீவு தேவிபுரம். அ.த.க. பாடசாலையில் கடமையாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. எமது பாடசாலை அதிகஸ்ரப் பிரதேச பாடசாலையாக இருந்தாலும் தெளிவான குறிக்கோளுடன் வெற்றிப் பாதையை நோக்கி வீறுநடைபோட்டு பலபோராட்டங்களுக்கு மத்தியிலும் முன்னேறிவரும் பாடசாலை ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் வருடம் பாடசாலை ஆரம்பித்து இந்நாள் வரையில் எமது பாடசாலை மாணவர்களின் கற்றலில் விருத்தியை ஏற்படுத்துவதற்காக சகல மாணவர்களுக்கும் லீட்ஸ் நிறுவனத்தால் கற்றல் உபகரணங்களும், திரு.க.தர்மசூரியர் (சமாதான நீதவான்) அவர்களின் ஏற்பாட்டில் பொன்னம்பலம் இளங்கோ (லண்டன்) அவர்களின் மூலம் 35 மாணவர்களுக்கு பாதணிகளும், திருமதி.சிவநிதி பன்னீர்செல்வம் (சுவிஸ்) அவர்களின் ஏற்பாட்டில் திரு.ஐயாத்துரை கணேசமூர்த்தி அவர்களால் 45 மாணவர்களுக்கு சீருடைத்துணிகளும், திருமதி.T.பிரசாத் (பிரான்ஸ்), திருமதி.S.கவிதா (பிரான்ஸ்), திருமதி.P.அழகாதேவி (கனடா), செல்வன்.ஜெ.ஜெனித், ஜெ.வினித் (சுவிஸ்) ஆகியோரால் மாதாந்தம் 22 மாணவர்களுக்கு கற்றலுக்கான நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது.

இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டிருக்கும் கோட்டக்கல்விப் பணிப்பாளரான பெருமதிப்புக்குரிய திரு.சு.தர்மரட்ணம் அவர்கள் எமது பாடசாலையிலும் மற்றும் மாணவரிலும் மிகுந்த அக்கறையுடையவர். தரம் 5 மாணவர்களின் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளை மேம்படுத்துவது தொடர்பாக அடிக்கடி ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் வழங்கி வருகின்றார். சிறப்புவிருந்தினராக வருகை தந்திருக்கும் ஆரம்பக் கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திரு.பா.ஸ்ரீஸ்குமார் அவர்கள் எமது பாடசாலைக்கு அடிக்கடி வருகை தந்து கற்றல், கற்பித்தலை மேம்படுத்துவது தொடர்பாக மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் சிறந்த வழிப்படுத்தலை வழங்குபவர்.கௌரவ விருந்தினராக வருகை தந்திருக்கும் செயற்பட்டு மகிழ்வோம் வலய இணைப்பாளர் திரு.ப.சசிரதன் அவர்களும் மாணவரின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்விற்கு சிறப்பான வழிப்படுத்தலை மேற்கொண்டு வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய இந்நிகழ்விற்கு 50,000 ரூபா பெறுமதியான பரிசுப் பொருட்களை **கிளி/ இராமநாதபுரம் மகாவித்தியாலய அதிபர் திரு.ச.புண்ணியமூர்த்தி**, **கிளி/முருகானந்த கல்லூரி ஆசிரியர் திரு.பா.பிரதீபன்** இவர்களின் ஏற்பாட்டில் றொரன்டோ மனிதநேயக்குரல் அமைப்பின் மூலம் ஈழத்தமிழ் கலை பண்பாட்டுக்கழகத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்டது. டென்மார்கில் வசித்து வரும் பாரதி ஜெனதாஸ் அவர்கள் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவிக்கு துவிச்சக்கர வண்டியினையும் அன்பளிப்புச் செய்துள்ளார், இவர் 2018இல் போட்டோபிரதி இயந்திரத்தினையும் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. மேலும் ஆசிரியர்களுக்கான கௌரவிப்பை பெற்றோர்கள் வழங்கியுள்ளனர். அதிபர் என்ற வகையில் இவர்கள் அனைவருக்கும் பாடசாலை சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந் நிகழ்வின் நிறைவாக, அன்பான மாணவச் செல்வங்களே இந் நிகழ்வானது கற்றலை ஊக்கிவிக்கின்ற நிகழ்வாகும். நீங்கள் அனைவரும் ஒழுக்கத்திலும், கல்வியிலும் சிறந்து விளங்க வேண்டுமென வாழ்த்துகின்றேன். மேலும் எமது பாடசாலை ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் மனம் கொண்டவர்கள் அவர்களையும் இந்நாளில் பாராட்டி, எமது பாடசாலை பெற்றோர்களும் பாடசாலையில் அக்கறையுடன் செயற்பட்டுவருகின்றனர். அவர்களுக்கும் எனதுபாராட்டுக்கள். தொடர்ந்து இந் நிகழ்விற்கு வருகை தந்த முதன்மை விருந்தினர், சிறப்பு விருந்தினர், கௌரவ விருந்தினர் மற்றும் ஏனைய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி.ல.கோபாலராசா**

**அதிபர்**

**கிளி/ மாயவனூர் வித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2020 தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர் விபரம்

### வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்

முழுப்பெயர் : பரமேஸ்வரன் கம்சிகா
பெற்ற புள்ளி : 171

### 100 புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்கள்

1. நாகராசா சாதுரியன் : 153
2. சிங்கராஜா டினோசன் : 148
3. தனசெயன் இனிதன் : 128
4. பரமலிங்கம் குகேந்தினி : 127
5. விசயகுமார் வேணுயன் : 121

### 70 புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்கள்

1. செல்வகுமார் டிலக்சன் : 90
2. சங்கர் கனிநிலா : 76
3. இளயராஜா அபிசா : 73

### 70 புள்ளிக்கு குறைந்த மாணவர்கள்

1. செல்வறஞ்சன் செந்தூரன் : 61
2. அடைக்கன் உஷாந்தன் : 51
3. பரமேஸ்வரன் சிந்து : 48

**2020 சித்தி வீதம் 75%**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எமது பாடசாலையில் ஆரம்பக்கல்வி கற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகிய பழைய மாணவர்கள் பெயர் விபரம்**

## கல்வியாண்டு - 2018

1. செல்வம் கபிர்ஷனா - (நாடகமும் அரங்கியலும்)
2. கலைச்செல்வன் டயாளினி - (இந்து நாகரிகம்)

## கல்வியாண்டு - 2019

1. விக்னேஸ்வரன் டிலக்ஸனா - (முகாமைத்துவம்)
   (வணிகப் பிரிவு 3A, மாவட்ட நிலை - 03)
2. கருணாகரன் அனுஜா - (பிரயோக விஞ்ஞானம்)
3. யோச்ரவீந்திரன் கோபினா
   - (நாடகமும் அரங்கியலும்)
4. பாலகிருஸ்ணன் நவப்பிரியா
   - ((நாடகமும் அரங்கியலும்)
5. ஜெயக்குமார் டிலோஜினி - (கர்நாடக சங்கீதம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 01.01.2003 முதன் முதலாக...

1. முதல் அதிபர் : திருமதி.லக்சாந்தி கோபாலராசா

2. முதல் ஆசிரியர்கள் : திருமதி.பராசக்தி சத்தியநாதன்
திருமதி.லீலாராணி நகுலேஸ்வரன்
செல்வி.சுமதி கந்தையா

3. தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் சித்தி பெற்ற முதல் மாணவன்:
செல்வன்.குணலிங்கம் அருள்வேந்தன்

5. பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட முதல் மாணவி : செல்வி.பரந்தாமன் துசாளினி
(தகவல் தொழிநுட்பம்)

6. முதல் ஆசிரியர் : செல்வி.கௌசிகா அலோசியஸ்

7. முதல் பாடத் தெரிவில் பல்கலைக் கழகத்திற்கு தெரிவானோர்

### 2018 கல்வியாண்டு

1. செல்வி செல்வம் கபிர்சனா (நாடகமும் அரங்கியலும்)
2. கலைச்செல்வன் டயாழினி (இந்துநாகரிகம்)

### 2019 கல்வியாண்டு

1. செல்வி விமலேஸ்வரன் டிலக்சனா (முகாமைத்துவம்)
2. செல்வி கருணாகரன் அனுஜா (பிரயோக விஞ்ஞானம்)
3. செல்வி.ஜெயக்குமார் டிலோஜினி (கர்நாடக சங்கீதம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2020 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு தரம் 1 - 5 வரை கற்பித்த ஆசிரியர் விபரம்**

1. முதன்மை நிலை I - திருமதி. குறிஞ்சி கங்காதரன்
2. முதன்மை நிலை II, III - திருமதி. உஷாயினி மாதவரூபன்

## பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்களிற்கு ஆரம்பக்கல்வி கற்பித்த ஆசிரியர் விபரம்

1. திருமதி. பராசக்தி சத்தியநாதன்
2. திருமதி.லீலாராணி நகுலேஸ்வரன்
3. திருமதி.சாந்தினி குகநாதன்
4. திருமதி.கேதீஸ்வரி கருணாகரன் (அமரர்)
5. திரு.சிவலிங்கம் சத்தியசீலன்
6. திரு.பொன்னுத்துரை சுகந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

பாராட்டு விழா நிகழ்விற்கு வருகை தந்த முதன்மை விருந்தினர், சிறப்பு விருந்தினர், கௌரவ விருந்தினர் மற்றும் ஏனைய விருந்தினர்களாக வந்து சிறப்பித்தவர்களுக்கும் முதற் கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்பளிப்புப் பொருட்கள் "ரோரன்ரோ மனித நேயக் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் ஈழத்தமிழ் கலை பண்பாட்டுக் கழகத்தால் அன்பளிப்பு செய்யப்பட்டது. மற்றும் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்ற மாணவிக்கான துவிச்சக்கர வண்டியை வழங்கிய டென்மார்க்கில் வசிக்கும் பாரதி ஜெனதாஸ் அவர்களுக்கும் மற்றும் ஆசிரியர்களுக்கான கௌரவிப்பினை பெற்றோர்களும் வழங்கியுள்ளனர். இவர்களுக்கு பாடசாலை சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், புலம்பெயர் வாழ் உறவுகளுக்கும், நலன் விரும்பிகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**- பாடசாலைச் சமூகம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கீதம்

இராகம் :- ஹம்சத்வனி　　　　　தாளம் :- ஆதி

### பல்லவி

வாழ்க வாழ்க வாழ்க என்று வாழ்த்திடுவோமே
வாழ்க எங்கள் மாயவனூர் வித்தியாலயம்.

### அனுபல்லவி

சேய்கள் அனைவரும் சேர்ந்துணை பணிந்துமே
தூய அறிவொளியை அள்ளித் தந்திட

### சரணம்

அமுது எங்கள் தமிழே இன்ப உயிர்த்தாயே
அரனும் அறிவுமாய் எம்மில் அமர்ந்திடவே
ஆங்கிலமொடு கணிதமும் சுற்றாடலை அறிந்திட
நவீன நுட்ப முறைகளை எமக்கு என்றும் புகட்டியே
(வாழ்க வாழ்க)

அன்பு தனை ஊட்டியே பண்புடனே அரவணைத்து
சமூகம் போற்றும் சிற்பிகளாய் காசினியில் ஒளிர்ந்திட
எமக்கு வழிகாட்டிடும் எம் ஆசான்களைப் பணிந்துமே
குன்றிலிட்ட தீபமாய் குவலயம் போற்ற வாழ்கவே.
(வாழ்க வாழ்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# கிளி/மாயவனூர் வித்தியாலயம்

## தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சை பாராட்டு விழா - 2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org